**<u>சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி</u>**
**<u>OS.53/2024</u>**

<u>நாள்.25.10.2025</u>
**<u>வா.சா.1. பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>**

என்னால் கொடுக்கப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பில் பிரதிவாதி என்னிடம் பணம் வாங்கும்போது சாட்சிகளாக இருந்து செல்வகுமார், சௌந்தர்ராஜன் ஆகியோருக்கு தெரியும் என்ற விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். பிரதிவாதி, எனக்கு எவ்வாறு அறிமுகம் ஆனார் என்ற விவரத்தையும் எனது வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் மேலே சொல்லிய விவரங்கள் எதுவும் இல்லை என்றால் இல்லை. தற்போது வெளியே நிற்கும் டேஸ்ட்டி சுப்பிரமணியன் என்பவர் சோழ சிட்பண்ட்ஸ் என்ற நிறுவனத்தை நடத்தி வருபவர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தற்போது இந்த வழக்கை நடத்துவதற்காக என்னுடன் தான் இருக்கிறார் என்றால் இல்லை. அவர் தற்போது எதற்காக இந்த நீதிமன்றத்திற்கு வந்தார் என்றால் நான் கடனாக பணம் கேட்டிருந்தேன். அதனை கொடுப்பதற்காக வந்துள்ளார். எவ்வளவு பணம் கேட்டிருந்தேன் என்றால் ரூ.5,00/– கேட்டிருந்தேன். டேஸ்ட்டி சுப்பிரமணியனிடம் நான் கடன் கேட்பதற்கும், அந்த பணத்தினை நீதிமன்றத்தில் வந்து கொடுக்கும் அளவிற்கு இருவருக்கும் பழக்கம் உள்ளது என்றால் எனக்கும், எனது மனைவிக்கும் நன்கு பழக்கமானவர். எனக்கும், எனது மனைவிக்கும் டேஸ்ட்டி சுப்பிரமணியனை சுமார் 10 வருடங்களாக தெரியும்.

மேற்படி டேஸ்ட்டி சுப்பிரமணியன் எனக்கு எல்லா உதவிகளும் செய்வார். அவர் திருமண மண்டபம் வேறு என்ன மாதிரியான தொழில் செய்து வருகிறார் என்ற விவரம் எனக்கு தெரியாது. மேற்படி டேஸ்ட்டி சுப்பிரமணியன் என்னிடம் ஏதாவது உதவி கேட்டால் நானும் செய்து கொடுப்பேன். பிரதிவாதி கலியமூர்த்தி மீது திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த புகாரினை டேஸ்ட்டி சுப்பிரமணியன் கொடுத்தாரா என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கி கொண்டு கொடுத்ததாக சொல்லப்படும் புரோநோட்டில் உள்ள சங்கதிகள் அனைத்துமே செல்வகுமார் என்பவர் தான் எழுதினார் என்றால் சரிதான். என்னிடம் எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் புரோநோட்டின் பின்புறம் யாருடைய கையெழுத்து உள்ளது என்றால் புரோநோட்டின் பின்புறம் எந்தவிதமான கையெழுத்தும் இல்லை என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் புரோநோட்டின் பின்புறம் போடப்பட்டிருக்கும் கையெழுத்து யாருடையது என்றால் எனக்கு தெரியவில்லை. என்னிடம் கொடுக்கும் போது புரோநோட்டின் பின்புறம் எதுவும் எழுதப்படாமல், எந்த கையொப்பமும் இல்லாமல் தான் இருந்தது என்றால் சரிதான்.

**<u>பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.</u>**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.